2021 செப்டம்பர் 6] [பேரவைத் தலைவர்]

இன்று மகாராஷ்டிர மாநில சிவசேனா கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ராவத் அவர்கள் அகில இந்திய அளவில் அரசியல் முதிர்ச்சி பெற்ற ஒரு முதல்வர் நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் என்று சொன்னார். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தளவில், தமிழ்நாட்டில் கடந்த ஆட்சியில் அச்சடிக்கப்பட்ட பைகளில் முன்னாள் முதல்வர் மறைந்த அம்மையார் ஜெயலலிதா அவர்களின் படமும், ஐயா எடப்பாடி அவர்களின் படமும் இருந்துள்ளதை மாற்ற வேண்டுமென்று சொன்னால், அதற்கு ரூ.13 கோடி செலவாகும் என்று அதிகாரிகள் சொன்னபோது, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், ரூபாய் 13 கோடியை வீணாக்க வேண்டாம். அதே பைகளிலேயே புத்தகங்களைக் கொடுங்கள் என்று சொல்லி, (மேசையைத் தட்டும் ஒலி) இன்று அகில இந்தியாவில் ஒரு மாபெரும் தலைவராக, மகாராஷ்டிர மாநில நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ராவத் சொன்னதுபோல் நானும் மனதாரப் பாராட்டுகிறேன்.

5. கவன ஈர்ப்பு

(அ) கொடைக்கானல், கட்டடங்கள் வரன்முறைப்படுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அடுத்து, அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. செந்தில்குமார் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார் அவர்கள், சுருக்கமாகச் சொல்லுங்கள்.*

திரு. ஐ.பி. செந்தில்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திண்டுக்கல் மாவட்டம், பழனி சட்டமன்றத் தொகுதி, கொடைக்கானலுக்குப் புதிய வரன்முறைத் திட்டம் மற்றும் ஏற்கெனவே உள்ள பழைய கட்டடங்களுக்கு ஒருமுறை வரன்முறைப்படுத்துதல் திட்டத்தைக் கொண்டு வருவது" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்த்து அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களின் அனுமதியோடு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இன்றைக்கு விதி எண் 110-ன்கீழ் அறிவித்திருக்கிற சமூக நீதி நாளை இன்னும் 11 நாட்களில் கடைப்பிடிக்க இருக்கின்றோம். உறுதிமொழி எடுக்க இருக்கின்றோம். மனித சமுதாயமே வரவேற்கிற ஓர் அறிவிப்பு. அதிலே எல்லோருக்கும் உரிமை உண்டு. ஆனால், எங்களுக்குக் கொஞ்சம் கூடுதலாக உரிமையுண்டு என்ற காரணத்தினால், ஈரோட்டின் சார்பாக, ஈரோடு மக்களின் சார்பாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எங்களுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரிவான அறிக்கை ஒன்று உறுப்பினர்களின் மேசையின்மீது வைக்கப்பட்டுள்ள கணினியில் கவன ஈர்ப்பு என்ற தலைப்பின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதை அவைக் குறிப்பிலே ஏற்றிக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அறிக்கை

தமிழ்நாட்டில் அனுமதியற்ற கட்டடங்களை வரன்முறைப்படுத்த நகர் ஊரமைப்பு சட்டம், 1971 பிரிவு 113C-ன்கீழ் வெளியிடப்பட்ட அரசாணை எண் 110, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை, நாள் 22-6-2017, விதி எண் 3 (ii)-ன்படி இந்த விதிகள் மலைப் பகுதிகளைத் தவிர்த்து, தமிழகம் முழுவதற்கும் பொருந்தும். மேற்படி, திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் முழுவதும் மலையிடப் பாதுகாப்புப் பகுதியில் அமைகிறது. எனவே, வரன்முறைப்படுத்த வழிவகை இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார் அவர்கள்.

திரு. ஐ.பி. செந்தில்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொடைக்கானல் மாஸ்டர் பிளான் என்பது 1975 ஆம் ஆண்டு முதல் 2000 ஆம் ஆண்டு வரை தயாரிக்கப்பட்ட ஒன்று. The Tamil Nadu Town and Country Planning Act, 1971 மற்றும் அதற்குரிய வரைபடத்தின் அடிப்படையில் இது ஆரம்பிக்கப்பட்டதாகும். ஆனால், அரசால் 1989 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட மலைப் பகுதி கட்டட பிரத்யேகச் சட்டம் மற்றும் 1986 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட மாசுக் கட்டுப்பாட்டு விதிகள் ஆகியவற்றை

2021 செப்டம்பர் 6] [திரு. ஐ.பி. செந்தில்குமார்]

நடைமுறைப்படுத்த வேண்டிய காரணத்தால், மாஸ்டர் பிளான் தயாரிப்பில் சுமார் 18 ஆண்டுகள் தாமதமாகின. நீதிமன்றத்தின் உத்தரவால் முதன்முதலாக கொடைக்கானல் முதன்மைத் திட்டமானது, அரசாணை எண் 170, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை, நாள் 4–3–1993–ல் அங்கீகரிக்கப்பட்டது. பின் அரசிதழில் எண் 115, பகுதி 2, பிரிவு 2, நாள் 6–3–1993–ல் அறிவிப்பு செய்யப்பட்டது. 1993–ல்தான் கொடைக்கானலுக்கு Master Plan *வந்திருக்கிறது. 5 வருடங்களுக்குப் பிறகு, அதை மறு ஆய்வு செய்ய வேண்டுமென்று சொல்லி, ஊட்டி முழுமைத் திட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு, அரசாணை எண் 339, நாள் 11–8–1999–ன்மூலம் திறம் படைத்தவர்கள் குழு ஒன்று உருவாக்கப்பட்டது. ஆக, திட்டத்தில் 22 ஆண்டுகளில் இரண்டு முறைதான் அந்த* Expert Committee*–ன் கூட்டம் நடைபெற்றிருக்கிறது.*

முற்பகல் 11–25

2010–ல் திருத்தப்படுவதற்கு முன்பு, குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், மொத்தமாக 22 ஆண்டுகளில், 7–4–2005–ல் ஒரு கூட்டமும், 30–7–2016–ல் ஒரு கூட்டமும் என இரண்டு முறைதான் அந்தத் திறம் படைத்தவர்களுடைய குழுக் கூட்டம் நடத்தப்பட்டிருக்கிறது. ஆக, மீண்டும் நீதிமன்றத்தின் வழிகாட்டுதலில், கடந்த அரசு ஒரு முழுமைத் திட்டத்தை உருவாக்கியிருக்கிறது. 30–7–2016 அன்று நடைபெற்ற அந்த முதல் கூட்டத்தில் கடந்த முறை சட்டமன்ற உறுப்பினராக இருந்த நான் ஓர் உறுப்பினராகப் பங்கேற்றிருக்கிறேன். ஆனால், preliminary discussion *மட்டும்தான் அந்தக் கூட்டத்திலே செய்யப்பட்டது. அதற்குப்பிறகு, 4 ஆண்டுகளாக துறையினுடைய அதிகாரிகளை மட்டும் அழைத்துப் பேசி,* Master Plan *அங்கே கொண்டு வரப்பட்டிருக்கிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார், சுருக்கமாகக் கேள்வியைக் கேளுங்கள், மாண்புமிகு அமைச்சர் நல்ல பதில் வைத்திருக்கிறார்.*

திரு. ஐ.பி. செந்தில்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது முக்கியமானது, முடித்து விடுகிறேன். ஏனென்றால். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், உங்களுக்கு இன்னொரு கேள்வி கேட்பதற்கும் வாய்ப்பு இருக்கிறது.*

அதனால் சுருக்கமாகக் கேள்வியைக் கேளுங்கள், மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்லட்டும். இன்னொரு கேள்விக்கு வருவோம்.

திரு. ஐ.பி. செந்தில்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏனென்றால், இந்தத் திட்டத்தில் நிறைய குளறுபடிகள் இருக்கின்றன. 9 நில வகைப்பாடுகளை, மண்டலங்களை உருவாக்கியிருக்கிறார்கள். அதில் நிறைய குளறுபடிகள் இருக்கின்றன. அந்தக் குளறுபடிகளைச் சரி செய்ய வேண்டுமென்று சொன்னால், அந்த Expert Committee-ஐ மாற்றி அமைக்க வேண்டும். மாற்றியமைத்து, தகுதியானவர்களை அதில் நியமித்து, அந்தக் குழுவின் கூட்டத்தை நடத்தி, கருத்துக்களைக் கேட்டு, குறிப்பாக மக்களிடத்தில் மீண்டும் கருத்துகள் கேட்டு, ஒரு புதிய முழுமைத் திட்டத்தை ஏற்கெனவே இருக்கக்கூடிய கட்டடங்களுக்கு ஒருமுறை வரன்முறைப்படுத்துதல் திட்டத்தைக் கொண்டுவர, மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டுமென்று, முதல் கேள்வியாகக் கேட்க விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் இரண்டாவது கேள்வி சுருக்கமாகப் பேசுவதற்கு எழுதி வைத்துக்கொள்ளுங்கள்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2019 ஆம் ஆண்டு இரண்டாவது முழுமைத் திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அது நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது. இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் கூறியதுபோல, மலையிட பாதுகாப்புக் குழுவில் நிச்சயமாக சில மாற்றங்களைச் செய்ய வேண்டிய அவசியம் இருக்கிறது. எனவே, அவற்றையெல்லாம் செய்து, ஆய்வு செய்து, உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும், நீதிமன்றத்தினுடைய பல தீர்ப்புகள் இருக்கின்றன. நீதிமன்றத்திலே சில வழக்குகள் நிலுவையில் இருக்கின்றன. எனவே, இவற்றையெல்லாம் அடிப்படையாக வைத்து, அந்த மக்களுக்கு என்னவிதமான பாதுகாப்பான சூழலை உருவாக்க முடியுமோ, அதைச் செய்வதற்கு நிச்சயமாக நாம் தயாராக இருக்கிறோம். ஆனால், அதே நேரத்தில் அந்தச் சட்டத்தை வளைத்து செய்யக்கூடிய நிலைக்கு நாம் போகக்கூடாது என்பதும் முக்கியம். மக்களுக்கு பாதிப்பு இல்லாத நிலையிலேயும், அந்த சட்ட திட்டங்களைப் பயன்படுத்தி, இருக்கின்ற பிரச்சினைகளைத்

2021 செப்டம்பர் 6] *[திரு. சு. முத்துசாமி]*

தீர்ப்பதற்கும், அவர்களைப் பாதுகாப்பதற்கும் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு அரசாங்கம் நிச்சயமாக, சிறப்பான யோசனையை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார் அவர்கள்.*

திரு. ஐ.பி. செந்தில்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றி. குறிப்பாக, நீதிமன்ற வழக்குகள் தவிர்த்து, அங்கே இருக்கக்கூடிய குடியிருப்புகள், 1993–க்குப் பிறகு* Master Plan *இல்லாததனால், நகராட்சி எந்த அனுமதியையும் கொடுக்க இயலாததனால், அங்கே கட்டப்பட்ட கட்டடங்கள், அந்த அப்பாவி மக்கள், ஏழையெளியவர்கள், கிட்டத்தட்ட 20 ஆயிரம் குடும்பங்கள் இருக்கிறார்கள். எனவே, அவர்களுடைய வாழ்வாதாரத்தைக் கருத்தில்கொள்ள வேண்டும். குறிப்பாக, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, மாசுக் கட்டுப்பாடு, சுகாதாரம், மலைப் பகுதி கட்டட அமைப்பு விதிகள், தாவர வகைகள், காடு, பறவைகள், காட்டு விலங்குகள், மேய்ச்சல் நிலங்கள், நீர்நிலைகள் ஆகியவற்றைப் பாதுகாத்திட, இதுசம்பந்தப்பட்ட மாவட்ட அளவிலான அதிகாரிகளையும், அதேபோல கொடைக்கானலில் உள்ள மூத்த குடிமக்களையும் இணைத்து, இந்த* Expert Committee*–ஐ நீங்கள்* refresh *செய்து, மீண்டும் கருத்துகளைக் கேட்டு, புதிய வரன்முறைப்படுத்துதல் திட்டம் மற்றும் ஒரு முறை வரன்முறைப்படுத்துதல் திட்டத்தைக் கொண்டு வரவேண்டும்.*

முற்பகல் 11-30

இன்றைக்கு சமூக நீதியினுடைய வழித்தோன்றலாய், ஐயாவும் துரையுமாகிய, தலைவர் கலைஞருமாகிய, நம் தலைவர் இன்றைக்கு இந்த நாட்டில் முதலமைச்சராக சீரும் சிறப்புமாக (மேசையைத் தட்டும் ஒலி) சீர்மிகு தமிழகத்தை உருவாக்க, அவர் முன்னெடுத்துக் கொண்டிருக்கக்கூடிய இந்த அற்புதமான வேளையில், எங்களுடைய கொடைக்கானல் மட்டுமல்ல, தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய ஒட்டுமொத்த மலைப்பிரதேச மக்களும் நீண்ட நாட்களாக எதிர்பார்த்திருக்கக்கூடிய ஒரு விஷயம் இது.

ஆக, இந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மிகச் சிறப்பாக உள்வாங்கியிருக்கிறார்கள். எனவே, நான் இந்த அரசினிடத்தில் பணிவோடு கேட்டுக்கொள்ள

[திரு. ஐ.பி. செந்தில்குமார்] [2021 செப்டம்பர் 6

விரும்புவது, கேட்டதையும் கொடுத்திருக்கிறீர்கள், கேட்காததையும் தலைவர் அவர்கள் கொடுத்திருக்கின்றார்கள். இன்றைக்கு நாங்கள் உங்களிடத்தில்தான் கேட்க முடியும்; கேட்கிறோம்; நம்பிக்கையோடு கேட்கிறோம். ஏனென்று சொன்னால், நம்முடைய தேர்தல் பிரச்சாரத்தின்போது, அன்றைக்கு விடியலை நோக்கி தலைவரின் குரலாக நம்முடைய இளைஞரணியினுடைய செயலாளர் அண்ணன் சின்னவர் அவர்கள் கொடைக்கானலுக்கு வந்தபோது, அங்கிருக்கக்கூடிய மக்கள் அவர்களிடத்தில் அந்தக் கோரிக்கையைத் தந்தார்கள். அப்போதே, சட்ட திட்டத்திற்குட்பட்டு, நீதிமன்றத்தினுடைய வழிகாட்டுதல்களுக்குட்பட்டு நம்முடைய அரசு அமைகிறபோது, உங்களுக்கு உரிய வழிவகைகளை நாங்கள் ஏற்படுத்தித் தருவோம் என்று சொன்னார்கள். (மேசையைத் தட்டு ஒலி) அந்த நம்பிக்கையோடு இந்த அரசு நிறைவேற்றும் என்கிற எண்ணத்தோடு என் தொகுதி மக்களின் சார்பில் இந்தக் கோரிக்கையை நான் இங்கே வேண்டுகோளாக வைத்து விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1,496 மனுக்கள் வரன்முறைக்காக வந்திருக்கின்றன. இது சம்பந்தமாகத்தான் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருக்கிறது. அந்த அடிப்படையில் இந்த மனுக்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படும். ஆனால், அதே நேரத்தில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, அங்கேயிருக்கிற பொது மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கிற வகையிலே அமைக்கப்படவிருக்கிற குழுவிலே சரியானவர்கள் இடம் பெறுவார்கள். அங்கேயிருக்கின்ற பொது மக்களுடைய கருத்துகள் கேட்கப்பட்டு, அதன் அடிப்படையில் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும். நான் ஒன்றை இங்கே வேண்டுகோளாகச் சொல்ல விரும்புகிறேன். ஏற்கெனவே தெரியாமல் கட்டப்பட்ட கட்டடங்களை வரன்முறைப்படுத்த, நிச்சயமாக அவர்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கலாம். நீதிமன்றத்தில் நாம் போராடலாம். ஆனால், இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்றன என்று தெரிந்த பின்னாலேயும், அந்தக் கட்டடங்களைக் கட்டுவதை தவிர்க்க வேண்டும். அதற்கு நாம் எல்லோரும் அவர்களுக்கு வழிகாட்டியாக இருக்க வேண்டும். அது தவிர்க்கப்பட வேண்டும் என்ற

2021 செப்டம்பர் 6] [*திரு. சு. முத்துசாமி*]

வேண்டுகோளையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(ஆ) 2017-2018 ஆம் ஆண்டு +2 பயின்ற மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. வி.பி. நாகைமாலி மற்றும் திரு. மா. சின்னதுரை ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி அவர்கள். முன் வரிசையில் இருக்கும் நீங்கள் இரண்டு பேரும் மிக அழகாகக் கேட்பீர்கள். சுருக்கமாகக் கேளுங்கள்.*

திரு. வி.பி. நாகைமாலி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடந்த ஆட்சியில் 2017–2018 ஆம் ஆண்டு +2 மாணவர்களுக்கு* Laptop *வழங்கப்படவில்லை. இம்மாணவர்களுக்கு* Laptop *வழங்கப்படும் என நமது தி.மு.க. தேர்தல் அறிக்கையிலும் இடம் பெற்றுள்ளது. அதை உடன் வழங்கிட நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம்" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுடைய அனுமதியோடு, புத்தகப் பையில் எதிர்க்கட்சித் தலைவர்கள் புகைப்படம் அப்படியே இருக்க வேண்டும் என்று சொன்ன அதே முதலமைச்சர்தான், 14 ஆண்டுகளுக்குப் பிறகு நல்லாசிரியர் விருது சான்றிதழில் முதல்வர் அவர்களுடைய படம் இருக்கக்கூடாது என்று சொல்லி, (மேசையைத் தட்டும் ஒலி) நேற்று 389 ஆசிரியர் பெருமக்களுக்கு நற்சான்றிதழ்களை நாங்கள் பெருமையோடு வழங்கியிருக்கிறோம் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். கவன ஈர்ப்பு தொடர்பான விவர அறிக்கை ஒன்று மாண்புமிகு உறுப்பினர்களின் மேசையில் வைக்கப்பட்டுள்ள கணினியில் கவன ஈர்ப்பு என்ற தலைப்பின்கீழ் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. அதனை அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.*